**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 150/2026**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 5 |
| Name (திரு/திருமதி) | : நாகப்பன் |
| Father's Name/ Husband's Name | : கிருஷ்ணன் |
| Village & Taluk | : செஞ்சி |
| Calling | : சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Age | : 58 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.2026**

1 ,3 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர்இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்போது செஞ்சி கா.நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. நவனீதகிருஷ்ணன் என்பவரின் கையொப்பமும் எனக்கு நன்கு தெரியும். கடந்த 08.12.2024 ம் 11.30 உதவி ஆய்வாளர் திரு. நவனீதகிருஷ்ணன் என்பவர் பணியில் இருந்தபோது CSR. No.1546/2024 யை பரிசீலனை செய்து செஞ்சி காவல் நிலைய குற்ற எண். 665/2024 பிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS and 4 of TNPHW Act–ன் கீழ் மு.த.அ பதிவு செய்துள்ளார். **மேற்படி புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை வரிசை முறையே அ.சா.2 மற்றும் அசாஆ–3–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் அன்றைய தினமே மதியம் 13.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சக்திவேல் மற்றும் லட்சுமி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் சுப்பிரமணிகவுண்டர், மனோகரி, ஜோதிலிங்கம், அண்ணாமலை, தனுஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரி கனேசன் என்பவரை கடந்த 08.12.2024ம் தேதி 16.30 மணிக்கு அப்பம்பட்டு பேருந்து நிறுத்தம் அருகே வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

பின்பு அவர் இவ்வழக்கில் காயமடைந்த அ.சா.–2 மனோகரி என்பவருக்கு சிகிச்சை வழங்கிய செஞ்சி அரசு ம.ம மருத்துவர் திரு. பாலகோபால் என்பவரை விசாரித்து அ.சா..2 க்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச் சான்று பெற்றுள்ளார். மேற்படி காயச் சான்றில் அ.சா..2 க்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என கூறி சான்று வழங்கியுள்ளார். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் இவ்வழக்கில் காயமடைந்த அ.சா.2–ற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை மூலம் வழக்கின் சட்டப்பிரிவுகளான 296(b), 118(1), 351(3) of BNS and 4 of TNPHW Act– –வை 296(b), 118(2), 351(3) of BNS and 4 of TNPHW Act– என் பிரிவு மாற்றம் செய்துள்ளார். **மேற்படி சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.7– ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவரது விசாரணையில் இவ்வழக்கு சம்பவத்தில் விஜயலட்சுமி மற்றும் தேவி ஆகியோர்கள் ஈடுபடவில்லை என்பதால் மேற்படி நபர்களை இவ்வழக்கில் இருந்து நீக்கம் செய்து எதிரி நீக்கல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **மேற்படி எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 296(b), 118(2), 351(3) of BNS and 4 of TNPHW Act– –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இவ்வழக்கின் சாட்சிகளை எனக்கு தெரியாது என்றாலும், அவர்களை நான் இவ்வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய் புகாரை புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும்,

**எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், நான் புலன் விசாரணை அதிகாரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.**

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

| |
|---|
| என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.<br>Sd/–B.Vidhya<br>குற்றவியல் நீதித்துறை நடுவர்,<br>செஞ்சி. |